# உதயன்

சுடர் : 37
கதிர் : 340

செவ்வாய்க்கிழமை
01 நவம்பர் 2022

ஐப்பசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50


## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, நவ. 1
வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது சடலமாக மீட்கப் பட்ட ஆண் நேற்றிரவு வரை அடையாளம் 10

உயிர்கொல்லி போதைப்பொருளைக் கட்டுப்படுத்த

# வடக்கு மாகாணத்தில் விசேட வழிகாட்டல் குழு

## நீதி அமைச்சரின் நேரடித் தலையீட்டில் ஆளுநர் தலைமையில் இயங்கும்

**யாழ்ப்பாணம், நவம்பர் 1**

**வடக்கு மாகாணத்தில் வைரஸ் போன்று உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபித்துள்ளதால் அதனைத் துரிதகதியில் கட்டுப்படுத்துவதற்கு விசேட வழிகாட்டல் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் நேரடித் தலையீட்டில், வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் இந்தக் குழு உருவாக்கப்பட்டுள் ளது.** 11

போதைப்பொருள் பாவனை

## இரண்டே மாதங்களில் 508 பேர் யாழில் கைது

நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1
உயிர்கொல்லி போதைப்பா வனையுடன் தொடர்புடைய 508 பேர் கடந்த இரண்டு மாதங்களில் யாழ்ப்பாணத் தில் கைது செய்யப் 11

## அழகுக்கலை நிலையங்கள் ஊடாக பெண்களிடம் பரவும் போதைப்பொருள்

கொழும்பு, நவ. 1
இலங்கையில் பெண்களிட மும் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனை அதிகரித் துள்ளது. அழகுக் கலை நிலையங்கள் 11

## கொட்டித்தீர்க்கும் கனமழை பல இடங்களில் வெள்ளம்

விரிவு - பக். 11

## பாணின் விலை நாளை குறையும்?

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 1
தேசிய ரீதியில் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலை நேற்று 11

## கொள்ளையனிடமிருந்து 5 பவுண் நகை மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 1
வழிப்பறிக் கொள்ளையனிடமிருந்து 5 பவுண் தங்க நகை மீட்கப்பட்டுள்ள 11

## எரிபொருள் விலையில் மாற்றம் வரலாம்?

கொழும்பு, நவ. 1
எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைவாக இன்று எரிபொருளுக்கான விலையில் மாற் றம் ஏற்படுவதற்கான சாத்தியம் 10

வலி. வடக்கு காணி சுவீகரிப்பு:

## வடக்கு - கிழக்குப் பல்கலை மாணவர்கள் ஒன்றிணைந்து நாளை பெரும்போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1
வலிகாமம் வடக்கில் பாதுகாப்புத் தரப்பின் ஆக்கிரமிப்பிலுள்ள ஆயி ரத்து 600 ஏக்கர் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் அரசாங் கத்தின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரி வித்து நாளை புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு தெல்லிப்பழைச் சந்தி யில் மாபெரும் 11

## உயிர்கொல்லி போதைப்பொருள்; கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ தலைமையில் நேற்று இடம்பெற்ற முக்கியமான கலந் துரையாடலில் பேசப்பட்ட விடயங் கள் சுருக்கமாக ஒரே பார்வையில் -

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு மேலதிகமாக விநியோகமும் அதிகம்.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் உளவள ஆசிரியர்கள் 54பேரே இருக்கின்றனர். இந்த எண் ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாண வர்கள் இருவரும் உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமை.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் 9 ஆயிரத்து 900 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய் வில், உலகின் மிக மிக ஆபத்தான உயிர்கொல்லி கொக்கேய்ன் பாவனையாளராக ஒருவர் அடையா ளப்படுத்தப்பட்டுள்ளார்.

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையா னவர்கள் சமூகமயப்படுத்தல் சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை போன்றவற்றுக்கு வருவது அதிகரிப்பு.

வடக்கு மாகாணத்துக்கான புனர்வாழ்வு நிலை யத்தை அமைக்க அரச கட்டடத்தை இரண்டு வாரங் களுக்குள் வழங்கவேண்டும் என்று ஆளுநர் பணிப்பு.

வடக்கு மாகாணத்திலுள்ள மருந்தகங்கள் மருத்து வச் சிட்டை இன்றி 25 ரூபா வலி நிவாரணிகளை (உயிர்கொல்லி போதை மாத்திரை) 250 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர்.

வடக்கிலுள்ள மருத்துவர்கள் சிலரும் உயிர்கொல்லி போதை மாத்திரை விற்பனையை மேற்கொள்கின் றனர்.

உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரிகள் தம்மை பொலிஸார் கைது செய்வதிலிருந்து தப் பிக்க 2 ஆயிரம் ரூபாவுக்கு தகவலாளிகளை அமர்த் தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் – பொம்மைவெளிப்பகுதியில் பெண் ஒருவர் தொடர்ச்சியாக உயிர்கொல்லி ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடுகின்றார். அவரைப் பொலி ஸார் கைது செய்கின்றனர் இல்லை.

உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரிகள் என்பது உறுதியாகத் தெரிந்தால், அவர்களைக் கைது செய்ய ஆதாரம் இல்லையென்றால் விசா ரணை என்று பொலிஸ் நிலையத்துக்கு தொடர்ச்சி யாக பல மணிநேரம் அழையுங்கள் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ஆலோசனை.


வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதை வியா பாரிகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங் கினால் அவர்கள் அதனைக் காட்டிக்கொடுக்கின்ற னர் என்று மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர் என நீதி அமைச்சர் நேரடியாகப் பொலிஸாரிடம் தெரிவிப்பு.

உயிர்கொல்லி போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு யாழ்ப்பாண மாவட்டத்துடன் ஒப்பிடு கையில் வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் குறைவு. (அ-ஒ-5-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் இலங்கையும் நாணயத்தின் இரு பக்கம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 1**

**'கலாசார மற்றும் மத ரீதியிலான சில வேறுபாடுகள் இருந்தாலும், இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அந்த ஒற்றுமைகள் பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்களில் தீபாவளியும் ஒன்று என்றும், அது இன்று முழு உலகமும் கொண்டாடும் பண்டிகையாக மாறியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் கொழும்பு எக்ஸ்பட்ஸ் கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

தீபாவளி என்பது அனைவரையும் ஒன்றிணைக்கும் மற்றும் நெருங்கியவர்களை சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் குறிக்கும் வகையில் தீபாவளிக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக கொழும்பு வெளிநாட்டு கலாசார சங்கத்துக்கு நன்றியும் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று நோய் காரணமாக இலங்கை பொருளாதார ரீதியாக சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில், பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் வாழ்க்கையைப் பிரகாசமாக்குவதற்கு கலாசார சங்கம் ஆற்றிவரும் பங்களிப்பையும் ஜனாதிபதி பாராட்டினார்.

சிரேஷ்ட பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கொழும்பு வெளிநாட்டு கலாசார சங்கத்தின் தலைவர் கப்டன் ஏ.பேனர்ஜி மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (ம-22)



### ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்காக

# இனவாதக் கும்பலிடம் சரணடைந்து மக்களை ஏமாற்ற விரும்பவில்லை!

## சஜித் பிரேமதாஸ வெளிப்படை

கொழும்பு, நவ 1

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்காக, இனவாதக் கும்பலிடம் சரணடைந்து மக்களுக்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா, ஹட்டன் பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று நான் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டிருந்தால் பெரமுனவின் பாதுகாவலராக மாற வேண்டியிருந்திருக்கும். இனவாத, மதவாத கும்பலுடன் இணைய வேண்டியிருந்திருக்கும். இனவாதி ஒருவரின் முன்னால் சென்று சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கும். அவ்வாறானதொரு விடயத்துக்கு நான் ஒருபோதும் தயாராகவில்லை.

எனது சுயமரியாதையை நான் அதிகம் மதிக்கின்றேன். பதவிகளுக்காக எனது சுயமரியாதையைக் காட்டிக் கொடுக்காத பயணத்தை மேற்கொள்கின்றேன். சாம்பலில் இருந்து எழ முயற்சிப்பவர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். நாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அரசை அமைக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

கடந்தகாலத்தில் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுகளால் முழு நாடும் வங்குரோத்தடைந்தது. குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முற்றாகவே சரிந்தது.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்களை எப்போதும் தொழிலாளிகளாகவே வைத்திருக்க சிலர் விரும்புகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அதை முற்றிலும் மாற்றுவோம். அவர்களுக்கு மிகச் சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

அடிமைக் கலாசாரம் ஒழிக்கப்பட வேண்டும். அன்றும் இன்றும் தோட்டங்களில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்ற வேண்டும் எனக் கூறுவது ஓர் ஏற்பாட்டுடன் ஆகும் - என்றார். (ம-14-22)

### இலங்கையுடன் ஐக்கியப்படுத்த

# மலையக மக்களுக்கு தனிக்குழு அமையும்!

கொழும்பு, நவ. 1

மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மலையகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களில் சிலர் இலங்கை சமூகத்துடன் வெற்றிகரமாக இணைந்துள்ளனர் என்றும், வேறு சிலர் அங்கு தோல்வியடைந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றேன் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு இணங்க புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களை பொறுப்பேற்கும் நிகழ்வு ஜனாதிபதியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட மருத்துவமனைகள் சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டுவரும் அதேவேளை, தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி உறுதி செய்யப்படும்.

ஏனைய மக்களைப் போன்று மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது சொந்த வீட்டில் வசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் மற்றும் அவற்றில் வீடுகளை அமைக்கும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் அரசின் ஆதரவு வழங்கப் படுகின்றது.

மலையக மக்களை வறுமையில் இருந்து விடுவித்து, அவர்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்காக, அங்கு வாழும் மக்களின் எதிர்காலம் மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் அரசு மேலும் கவனம் செலுத்தும் - என்றார். (ம-22)

# 22ஆவது திருத்தமென்பது அனைத்துக்கும் தீர்வல்ல!

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

22ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என கருத்திற்கொள்ளமுடியாது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தவாரம் அரசமைப்புச் சீர்திருத்தம் மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டதால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றில்லை. இதனால்தான் நான் சபாநாயகரிடம் புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்றுத் தருமாறு கோரியிருக்கின்றேன். இது நடைமுறைப் படுத்தப்பட்டால், அரசமைப்பானது எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் மக்களுக்கு சேவையை வழங்கக்கூடிய நிலைக்கு மாறும் என்பது உறுதி. ஒரு விசேட செயலணியை அமைத்து வருகின்ற 6 மாதங்களுக்குள் தேர்தல் சீர்திருத்த முறைமை தொடர்பாக ஆராய்ந்து, தேர்தலை சரியான முறையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ம-125)

# தேர்தலைப் பிற்போட அனுமதிக்கமாட்டோம்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1

உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கிலேயே தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு நீதி அமைச்சர் கோரியுள்ளார். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். தேர்தலை பிற்போட இடமளிக்கமாட்டோம் இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'தமிழ் முற்போக்கு கூட்டணிக்கான மக்கள் ஆதரவு அலை இன்னமும் குறையவில்லை. இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களின்போது இது நிரூபணமானது. மக்கள்தான் கூட்டணியின் ஆலமரம். அந்த சக்தி எமது பக்கம் உள்ளது.

எந்தவொரு தேர்தலையும் சந்திக்கத் தயார் என ராஜபக்சக்கள் கூறுகின்றனர். ஆனால் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு நீதி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பதே இதன் நோக்கம். ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரமே விஜயதாஸ ராஜபக்ச இவ்வாறு செயற்பட்டிருப்பார். எனவே, தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் இரட்டை நிலைப்பாடு உள்ளது. எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயார். உள்ளூராட்சி தேர்தலை பிற்போட இடமளிக்கமாட்டோம்' - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஓ.எம்.பி. அலுவலகத்தால் எவ்வித பயனும் இல்லை!

## மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று மன்னாரில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"நீதி இல்லாத நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் எதற்கு?", "ஓ.எம்.பி. அலுவலகமே மன்னாரை விட்டு வெளியேறு", "சர்வதேச விசாரணையே வேண்டும்", "இரண்டு லட்சமும் வேண்டாம், மரணச் சான்றிதழும் வேண்டாம்" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் தலைவர் ஏ.திலீபன் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-213)

# நீதியமைச்சின் ஏற்பாட்டில் யாழில் நடமாடும் சேவை

கொழும்பு, நவ.1

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இழப்பீடுகள், காயமடைந்தவர்களுக்கான ஆவணங்கள் பெறுவதில் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்குடனும், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மீளவும் வந்துள்ள மக்கள் தமது ஆவணங்களைப் பெறுவதை இலகுபடுத்தும் நோக்குடனும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையை, நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் நீதி அமைச்சின் செயலாளர் வசந்தபெரேரா, நீதி அமைச்சர் நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் சமுர்த்தியசிங்க, யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், மேலதிக மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், காணி மேலதிக செயலாளர் செ.முரளிதரன், பிரதேசசெயலாளர்கள், மற்றும் ஏனைய அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளிட்ட கலந்து கொண்டனர். (எ-20-27)





# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்!

## விஜேதாஸ ராஜபக்சவுக்கும் எதிர்ப்பு

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குள்ளும் நுழைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச அந்த நடமாடும் சேவையை ஆரம்பிப்பதற்காக அங்கு வந்திருந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'ஓ.எம்.பி. வேண்டாம்', 'சர்வதேச விசாரணையை மட்டுமே கோருகின்றோம்', 'இரண்டு லட்சம் லஞ்சம் வேண்டாம்', 'விஜேதாஸவே வெளியேறு' போன்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் எழுப்பப்பட்டன. இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் கலந்து கொண்டிருந்தார். (எ-20)

# மழை தொடரும்

கொழும்பு, நவ. 1

இலங்கையை அண்மித்த தாழ்வான வளிமண்டலத்தில் கொந்தளிப்பான இயல்பு உருவாகியுள்ளதால், அடுத்த சில நாள்களுக்கு மழை வீழ்ச்சி அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம-இ)

# நடமாடும் சேவை

கொடிகாமம், நவ. 1

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கை மக்களுக்காக, நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் கிளிநொச்சி திறன் விருத்தி மத்திய நிலைய வளாகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கை அகதிகளின் குடியுரிமையை பெற்றுக் கொள்வது, பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வது, தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் தொலைந்து போன அடையாள அட்டையின் பிரதியினைப் பெற்றுக் கொள்ளல், காணிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேறுவது தொடர்பான பிரச்சினைகளுக்கு உதவி வழங்குதல், இழப்பீடுகளுக்கான கோரிக்கைகள் மற்றும் காணாமற்போன நபர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் போன்ற விடயங்கள் தொடர்பிலேயே இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (ய-159)

# மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு கடல்வளப் பாதுகாப்பு அவசியம்

## மன்னார் மாவட்டச்செயலர் தெரிவிப்பு

மன்னார், நவ. 1

மன்னார் மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் கடலை நம்பியே வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றன. அவர்களின் வாழ்வாதாரத்துக்காக எமது கடற்பகுதியில் சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உண்டு என மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையால் எண்ணெய் கசிவு முன்னாயத்தம் தொடர்பான பயிற்சிப் பாசறை அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் நீர்கொழும்பில் கடலில் ஏற்பட்ட ஓர் அனர்த்தம் காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தனர். எதிர்காலத்தில் திடீரென இவ்வாறு ஒரு சம்பவம் எங்களுக்கு ஏற்படுமாகில் இந்தப் பாசறையின் மூலம் என்ன செய்ய வேண்டும், யாருடன் தொடர்புகொள்ள வேண்டும் என்ற தெளிவு மீனவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-14-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 02 . 1950

இறப்பு 28 . 10 . 2022

திருமதி

## சிவசுப்பிரமணியம் சத்தியதேவி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சத்தியதேவி கடந்த (28.10.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சகிலா, பிறேமலதா, சியாமினி, றாஜினி, சுபாசினி, மகிழமுருகன், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"சிவம் இல்லம்"**
**ஊரெழு கிழக்கு,**
**சுன்னாகம்.**
**077 617 2430**

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.21456) (2.6)

# போதைப்பொருள் கடத்தலுக்கு பாதுகாப்புப் பிரிவும் உடந்தை!

*மாக்கஸ் அடிகளார் குற்றச்சாட்டு*

மன்னார், நவ. 1

வடமாகாணத்தில் மட்டுமன்றி நாடு முழுவதும் தற்போது அதிகரித்துவரும் உயிர்கொல்லிப் போதைப்பொருள் எவ்வாறு கடத்தப்படுகின்றது, எவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றது என அனைத்தும் தெரிந்தும் அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் உள்ளனர் - இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபையின் உறுப்பினரும் தலைமன்னார் பங்குத் தந்தையுமான அருட்பணி மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் தீவில் வடக்கு மற்றும் தெற்கு கடற்கரையோரமாக மீனவர்கள் குடியிருக்கும் பகுதியில் காற்றாலை அமைக்கப்படுவதால் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் கனியவள மணல் அகழ்வால் விரைவில் மன்னார் தீவு கடலுக்குள் அமிழ்ந்து போகும் அபாயமும் தோன்றியுள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பு பகுதியில் விவசாயமும் கால்நடையுமே பிரதான தொழிலாகக் காணப்படுகின்றது. ஆனால் இன்னும் கால்நடைக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இவ்வாறான பல பாதிப்புக்கள் ஒருபுறமிருக்க இங்கு போதைப் பொருள் இறக்குமதியும் பாவனையும் அதிகம். இது பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். எவ்வாறு போதைப் பொருள் கடத்தப்படுகின்றது? விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் யார் என்பது வெளிச்சம். அனைத்தும் தெரிந்த அதிகாரிகள் கண்மூடிக் கொண்டு இருக்கின்றார்கள் - என்றார்.

(ம-14,60)

## போரால் ஆக்கிரமிக்கப்பட்டவற்றில்

# 6 வீதமான நிலப்பரப்புதான் விடுவிக்கப்படவில்லையாம்!

**யாழ்ப்பாணம், நவ. 1**

**போரால் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பில் இன்னமும் 6 வீதமான நிலப்பரப்புத்தான் விடுவிக்கப்படவில்லை. அவற்றை விடுவிப்பதற்குரிய சாத்தியப்பாடுகள் குறித்து விரைவில் ஆராயப்படும் என்று தெரிவித்தார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது அமைச்சின் கீழ் காணமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட விவகாரங்களுக்காக மூன்று அலுவலகங்கள் இருக்கின்றன. இவற்றில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பதிவுகள் நான் பொறுப்பேற்ற காலத்தில் 65ஆக காணப்பட்டன. தற்போது அவை ஆயிரத்து 500 ஆக அதிகரித்துள்ளன.

போர் காரணமாக கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பில் 94 வீதமான பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னும் 6 வீதமான பகுதிகள்தான் விடுவிக்கப்படவில்லை. எஞ்சிய நிலங்களை விடுவிப்பதற்குரிய சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நான் சிறப்புச் செயலணி ஒன்றை அமைத்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக நான் நேரில் சென்று மேற்படி காணிவிடுவிப்பின் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயவுள்ளேன்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுவிப்பது தொடர்பாகவும் நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். அதன் ஒருபகுதியாக கடந்த வாரம் எட்டு கைதிகள் விடுவிக்கப் பட்டனர். படிப்படியாக இனங்களுக்கு இடையிலான முரண் பாட்டைத் தவிர்க்கும் முகமாக அனைத்து விடயங்களுக்கும் இவ்வருட இறுதிக்குள் தீர்வு காண்பேன் - என்றார்.

(ம-125)

# மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தினது தலைவராக இளஞ்செழியன் தெரிவு

மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவராக மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதன்முறையாக தமிழ்பேசும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர், மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்துக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சங்கத்தின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமையவே, உப தலைவராக கடமையாற்றிவந்த மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-14,26)

# ஏனைய அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்கவேண்டும்!

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸவிடம் அரசியல் கைதிகளின் உறவுகள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

நீண்ட காலமாக சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச யாழில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசிகள் கைதிகள் அண்மையில் விடுவிக்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள 34 பேரையும் விடுவிக்குமாறு அவர்கள் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், 'தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டையே பின்பற்றி வருகிறோம். அண்மையில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் சிறையில் உள்ளவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் இனிவரும் நாள்களில் மேற்கொள்ளப்படும். அவர்களின் வழக்கு நிலைமைகள் தொடர்பில் சட்டமா அதிபருடன் தொடர்ந்து கலந்துரையாடிய பின்னர் விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் வாகீசன் உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## போதைக் கலாசாரத்துக்கும் பொறுப்புக்கூறல் வேண்டும்

வடமாகாணத்தில் முப்படையினரதும் பொலிஸாரினதும் கண்காணிப்பு 24 மணிநேரமும் நிலைபெற்றிருக்கின்றது. இவ்வாறு எந்நேரமும் படையினரின் கண்காணிப்புக்குள் இருக்கும் பகுதிக்குள் எவ்வழியால் போதைப்பொருள்கள் வருகின்றன? என்று கேள்வியெழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன. வடக்கில் இளையோரை இலக்குவைத்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் அத்தனை பெரும் புள்ளிகளையும் கண்டுபிடிக்க அனைத்து மாவட்டங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார் அவர்.

மைத்திரி ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் அவரின் ஆட்சி தொடர்பில் சில விமர்சனங்கள் இருக்கவே செய்தன. ஆனால், போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக மைத்திரி மேற்கொண்ட நடவடிக்கைகளை அவ்வளவு இலேசாகக் குறைசொல்லிவிட முடியாது. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும், விற்பனைப் பேர்வழிகளுக்கும், பாதாள உலகத்தவர்களுக்கும் மைத்திரி ஒரு துர்க்கனவே. இப்போதும்கூட, இலங்கைக்குள்ளும் வடமாகாணத்திலும் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பது தொடர்பில் அவர் முன்வைத்துள்ள கருத்தானது, ஏனைய தலைவர்களினதும் ஆட்சியாளர்களினதும் கருத்துக்களில் இருந்து முழுதும் மாறுபட்டது. ஏனையவர்கள், போதைப்பொருளின் பாவனை அதிகரிப்பது தொடர்பில் பொத்தம் பொதுவான கருத்துக்களை ஆங்காங்கே தெரிவித்துவிட்டுக் கடந்துவிட – 'போதைப்பொருள் கடத்தப்படும் சூட்சுமம் எது?' என்பதை நாடிபிடித்து வினவியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சகூட 'இலங்கையில் போதைப்பொருள் விநியோக மையமாக வடக்கு மாகாணமே இருக்கின்றது' என்று தெரிவித்துள்ளமையானது இங்கு கோடுகாட்ட வேண்டியது. நீதியமைச்சரின் கூற்றின் பின்னால், எழுப்பப்பட வேண்டிய கேள்விகளும் தேடப்பட வேண்டிய பதில்களும் நிறையவே இருக்கின்றன. இலங்கையில் உள்ள அத்தனை மாகாணங்களிலும் வடக்கிலேயே படைக்குவிப்பு மிகை அதிகம். முப்படையினரின் கண்காணிப்பற்ற பகுதிகள் என்று வடக்கில் இல்லவேயில்லை. இவ்வாறிருக்கையில் எவ்வாறு வடக்குக்குள் போதைப்பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன? படையினர் குவிக்கப்பட்டிருந்தும் போதைப்பொருள்களின் வருகை தாராள நிலை என்றால் ஏன் இந்தக் கடத்தல்களை படையினரால் கட்டுப்படுத்த முடியவில்லை? எனின், படையினருக்குரிய கடமைதான் என்ன?


விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரையில் வடக்கில் போதைக் கலாசாரம் என்பது இருக்கவேயில்லை. ஹெரோய்ன், கஞ்சா, மாவா, ஐஸ் போன்ற உயிர் கொல்லிகள் மக்களை அணுகவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தச் சொற்பதங்களே அன்று பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. ஆனால், இன்றோ மிகமிக இலகுவான அணுகல்கள் மூலமாக இந்தப் போதைப்பொருள்களை எவரேனும் கொள்வனவு செய்யலாம் என்ற நிலைதான் உள்ளது. இந்தச் சமூகப் பிறழ்வு ஏற்பட – ஏற்படுத்தப்பட என்ன காரணம்? இத்தகையதொரு பின்னணியில், 'வடக்கில் அதிகரிக்கும் போதைக் கலாசாரத்துக்கும் படையினரும் – பொலிஸாரும், அதிகாரிகளும் உடந்தை' என்று சமூக ஆர்வலர்கள் முன்வைக்கும் இமாலயக் குற்றச்சாட்டுக்களை அவ்வளவு இலகுவாக புறந்தள்ளிவிடவும் முடியாது. உண்மையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதி தலைமையிலான செயலணிகள் மூலம் பரிசீலிக்கப்பட வேண்டியவை தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். இந்த நாட்டில் அனைத்து இன மக்களும் பரஸ்பரம் சுயமரியாதையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்று ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் இருப்பதாகக் காட்டிக்கொள்ளப்படும் விருப்பம் இதய சுத்தியுடையதாயின், 'போர்க்கால' அடிப்படையில் தீர்வைத் தேடவேண்டிய விடயங்களில் வடக்குக்குள் படையினரின் கடும் பிரசன்னத்துக்கு மத்தியிலும் ஊடுருவும் போதைப்பொருள்களுக்கும்' முக்கியமான இடமுண்டு.

### வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்" – சீனப் பழமொழி





# மலையக மக்களை இந்தியா கைவிடாது

## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 1**

**மலையக மக்கள் இந்தியாவுடன் மிகவும் பலமான தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இந்தியாவும் மலையக மக்களை மறக்காது. இந்தியா உங்களை எந்த நேரத்திலும் நினைவில் வைத்திருக்கும் - இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**



ஹட்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வீடுகளின் நிர்மாணம் ஊடாகவும் புலமைப் பரிசில்கள் மற்றும் கல்வி ஊடாகவும் இந்தியா தொடர்ந்தும் உங்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகின்றது. நாங்கள் இங்கு வந்ததில் இருந்து இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் தொடர்பில் இந்திய மக்கள் அறிவார்கள். நான் இன்று ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இந்திய மக்கள் இலங்கையிலுள்ள சகோதர, சகோதரிகளுக்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். குறிப்பாக இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள்.

கடந்த அரசில் அமைச்சராக இருந்தபோது வீடுகளை நிர்மாணிப்பதில் பழனி திகாம்பரம் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இன்று இந்தியாவின் உதவி மூலம் உணவு, எரிபொருள், மருந்து, உரம் ஆகியவற்றுடன் அரிசி மாத்திரமல்லாமல் கோதுமை மாவும் இலங்கை மக்களுக்கும் இந்தப் பிராந்திய மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இளம் பிள்ளைகள், இளம் சிறுவர்கள் மற்றும் தாய்மாருக்கான பால்மாவை வழங்குவதற்கும் இந்தியா தயாராக உள்ளது. 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அதேபோன்று நீங்கள் கேட்காமலேயே நண்பன் செய்வதைப் போன்று இந்தியாவும் உதவி வழங்கும். உங்களின் நண்பனாக இந்தியா இருக்கும் என நான் உங்களுக்கு உறுதி அளிக்க விரும்புகின்றேன்.

இலங்கை மக்களுக்கும் இந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கும் இடையில் மிகவும் பலமான உறவு காணப்படுகின்றது. நீங்கள் கட்டாயம் இந்தியாவுக்கு வருகைதர வேண்டும். அடிக்கடி இந்தியாவுக்குப் பயணம் செய்யவேண்டும். ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளும் பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாடப்படுகின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்திய வம்சாவளி தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுக்கு வருகை தர வேண்டும் எனக் கோருகின்றேன்" - என்றார். (ம-22)

நாளை 02.11.2022 புதன்கிழமை ஐப்பசி 16

சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆவது திருத்தச் சட்டம் நேற்றுமுதல் நடைமுறை

## சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்

**கொழும்பு, நவ. 1**

**நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 22ஆம் திருத்தச் சட்டத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.**

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்ட வரைவு கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்சவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய நீதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.
கடந்த ஒக்ரோபர் மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதி ஆகிய இரு தினங்கள் அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் குறித்த விவாதங்கள் நடைபெற்றன. இரண்டாவது மதிப்பீட்டின் இறுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது. குழுநிலையில் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட பின்னர் மூன்றாவது மதிப்பீட்டுக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக 174 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டிருந்தது.
அதையடுத்து அரசமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டவரைவு, இருபத்தோராவது அரசமைப்புத் திருத்தமாக நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.
சட்டமூலமொன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறினாலும், அதை சபாநாயகர் சான்றுரைப்படுத்திய பின்னரே சட்டம் நடைமுறைக்கு வரும். அந்தவகையிலேயே 21 ஆவது திருத்தச் சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிப்பதற்கு 21 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-44)

# எதிர்வரும் ஜனவரியில் கல்வி முறை மாற்றம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1
நாட்டில் கல்வி முறையை மாற்றுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.
கொழும்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
கல்வி முறையில் மாற்றம் தொடர்பான திருத்தங்களை 6 பகுதிகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். கல்வி சீர்திருத்தத்தை முன்னெடுப்பதை விட, இன்று நாம் மாற்றத்துக்கு செல்லவேண்டும். கல்வி முறை மாற்றத்தை 6 பாகங்களாக திட்டமிட்டுள்ளோம். அதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் நிர்வாகத்தில் கல்வி மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இல்லையெனில் நாம் திறனை வளர்த்துக்கொள்ள முடியாது - என்றார். (ம-14,இ)

# தேர்தலை எதிர்கொள்ள சிறிலங்கா சு.கட்சி தயார்

## மைத்திரி சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 1
தனியாகவோ, கூட்டணியாகவோ தேர்தலை எதிர்கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராகவே உள்ளது. எனவே தேர்தலைப் பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சியைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமையகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளும் சக்தி எமக்கு இருக்கின்றது. தனியாகவோ, கூட்டணியாகவோ களமிறங்க நாம் தயார். எமது கட்சியுடன் இணைய முக்கியமான பிரமுகர்கள் பலர் தயாராக உள்ளனர். கட்சியை விட்டு வெளியேறியவர்களை விடவும் வரவுள்ளவர்கள் சிறந்தவர்கள் - என்றார்.
அதேவேளை அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், அமைச்சுப் பதவிகளை கைவிட்டால் நாளை வேண்டுமானாலும் மீண்டும் கட்சியில் இணையலாம் என கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14,44)

# தகுதிக்கமையவே அரச நியமனங்கள்

வெளிநாடுகளில் காணப்படும் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் என்பவற்றுக்கு அரசியல்வாதிகள் அல்லது அவர்களின் நண்பர்களை நியமிக்கும் வழக்கத்தை ஒழித்து, தகுதியானவர்களுக்கு மட்டும் நியமனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
பிரதான நாடொன்றில் கடமையாற்றி வரும் இரட்டைக்குடி யுரிமை கொண்ட தூதுவர் ஒருவர் அடிக்கடி களியாட்டங்களை நடத்தி வருகின்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே இந்த முடிவை அரசாங்கம் கொள்கையளவில் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி இந்தியா, சீனா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு புதிய தூதரக அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளனர் என்றும் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-14,இ)

# ஈழத்தமிழர்களுக்குப் பிரிட்டன் உறுதுணை வழங்க வேண்டும்

## ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 1
ஈழத்தமிழர்கள் படும் துன்பங்களை நீக்குவதற்கு பிரிட்டனின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள பாரத பூமியை பூர்வீகமாகக் கொண்ட ரிஷி சுனக் வழிவகை செய்யவேண்டும் -இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன்.
தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
பிரிட்டனின் பிரதமராக தாங்கள் பதவியேற்றமையையிட்டு இந்து மக்கள் சார்பில் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். பிரித்தானிய தேசம் எமது நாட்டைக் கைப்பற்றி சட்டதிட்டங்களை நெறிப்படுத்தியது.
1948ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போதிலும் இதுவரை தமிழர்களுக்கு நீதியான உரிமைகள் வழங்கப்படவில்லை.
தமிழர்களது நிலங்கள், இந்து ஆலயங்கள் அடாத்தாக அபகரிக்கப்படுகின்றன.
இறுதிப்போரில் சரணடைந்த காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இதுவரை நீதிகிட்டவில்லை.
இவற்றை சர்வதேசம் நன்கறியும். ஈழத்தமிழர்கள் தொடர்ந்து படும் துன்பங்களை நீக்க பிரிட்டனின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள தாங்கள் உறுதுணை வழங்கவேண்டும்- என்றுள்ளது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்குமாறும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும் என்றாலும் சமாளித்து விடுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது அதிகளவான வரியை சுமத்த வேண்டாம்

*முன்னாள் பிரதமர் மஹிந்த நீலிக்கண்ணீர்*



**கொழும்பு, நவ. 1**

**கடுமையான பொருளாதார அழுத்தத்துக்குள் ள்ளான மக்கள் மீது அதிக வரிகளைச் சுமத்த வேண்டாம் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் மீது வரி அல்லது கட்டணச் சுமைகளை சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் மீது எத்தனை புதிய வரிகள் விதிக்கப்பட்டாலும் அவற்றை வசூலிப்பது இலகுவானதல்ல. இவ்வாறான பிரேரணையை அரசியல் ரீதியாக ஆதரிக்க முடியாது. நாட்டின் உற்பத்திச் செயல்முறையை ஊக்குவிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம். ஆனால் அதிக வரிகளையோ கட்டணங்களையோ மக்கள் மீது சுமத்துவது நடைமுறைச் செயல் அல்ல என்றார்.

மஹிந்த ராஜபக்ச பிரதமராகவும் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகவும் இருந்த காலத்தில் நாட்டில் விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்தன. எதற்கும் வரிசையே நீடித்தது. இதையடுத்து ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் விளைவாகவே மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14,இ)

## புத்தரை விற்க முயன்ற இருவர் கைது

தங்கத்தால் செய்யப்பட்டதாகக் கூறி புத்தர் சிலையை ஐந்து கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கத்தால் செய்யப்பட்டது என்று கூறப்படும் புத்தர் சிலையின் ஜோடிக் கண்கள் விலைமதிப்பற்ற ரத்தினங்களால் ஆனது என்றும் சந்தேகநபர்கள் வாங்குபவரிடம் கூறியுள்ளனர். சிலையின் உயரம் சுமார் 12 அங்குலம் மற்றும் எடை சுமார் 14.6 கிலோகிராம் எனவும், கைது செய்யப்பட்ட இருவரும் தெஹியத்த கண்டி லிஹினியாகம பகுதியைச் சேர்ந்த 27, 34 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் இருந்த வீட்டை பொலிஸார் சோதனையிட்டபோது மேலும் மூவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஏ)

## போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ. 1

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெறும் பெரும்பாலான குற்றங்களின் பின்னணியில் தற்போது அதிகரிக்கப்பட்டு வரும் போதைப்பொருளே காணப்படுகின்றது. இந்த உயிர்கொல்லிப் போதைப்பொருள் பாவனையில் இருந்து எவ்வாறு விடுபடுவது என்றும் இதனால் ஏற்படும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பிலும் போதைப்பொருள் பாவனையிலிருந்து மீள்வது பற்றியும் விழிப்புணர்வில் விளக்கமளிக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனை பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு மாணவர்கள் உட்படுத்தப் படுவதுடன் வியாபாரத்திலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது தொடர்பில் தகவல்கள் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய தலைமையில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-14,26)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

(CS 21214) (3/6)

**தொடர்பு : 076 702 3565**

## பெயர் மாற்றம்

நேதவளவு, அல்வாய் தெற்கு, வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் **கணேசலிங்கம் இந்திராம்பாள்** ஆகிய நான் (01.11.2022) இன்றிலிருந்து **கணேசலிங்கம் இந்திராணி** என பெயரை மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை சனநாயக குடியரசு மக்களுக்கு அறிவிப்பதுடன் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் **இந்திராணி** என கையொப்பம் இடுவேன்.

**இந்திராணி**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 08 . 06 . 1976



**மறைவு** 31 . 10 . 2022

### கணேசலிங்கம் துவாரகன்

**(பழைய மாணவன் – யாழ்.இந்துக்கல்லூரி A/L 1995**
**முன்னாள் கணக்கு லிகிதர் T.R.R.O)**

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் துவாரகன் நேற்று (31.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசலிங்கம் (முன்னாள் கணக்காளர் கொமேஷல் கொம்பனி -கொழும்பு) மற்றும் யோகராணி தம்பதியரின் ஏக புத்திரனும் லக்ஷாயினியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் செல்வநாயகி, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் சந்திரமணிதேவி, கந்தசாமி-கங்காதேவி, காலஞ்சென்ற இரத்தினராணி-அருளம்பலம் மற்றும் வில்வராணி, காலஞ்சென்ற பசுபதி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி-நடராஜா, சிவகாமசுந்தரி-செல்லத்துரை, பூமலர்- அம்பிகைபாலன், ராஜேஸ்வரி மற்றும், பத்மதாசன், காலஞ்சென்றவர்களான இரத்தினராஜா-ராஜலக்சுமி, வில்வராஜா மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் பாலேந்திரன், பாலினி பாலகுமரன் (மோகன்), காலஞ்சென்ற பாலரஞ்சன் மற்றும் பாலமுரளிதரன், பாலமுகுந்தன், சுதர்ஷன் (ரூபன்), தீபா, விஜயராகவன், நிரஞ்சனா, சுகந்தன், நாகதாரணி (வித்தியா), முகுந்தன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், ஶ்ரீரஞ்சனி, ரஞ்சித், கமலினி, விமலினி, விமல்ராஜ், காசினி, காயத்திரி, நாவரசன், மாவிரதன், காலஞ்சென்ற நாவேந்தன் மற்றும் பார்த்தீபன், ஆசித்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 09.00 மணிளவில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"துவாரகை"
[illegible] வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் : **குடும்பத்தினர்.**
**0212220239, 0773867458**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 19 • 05 • 1948



**மறைவு** 11 • 11 • 2021

### அமரர் பஞ்சலிங்கம் புனிதவதி

**திதி: ஐப்பசி பூர்வபஷ்ஷ அட்டமி**

அன்னையாக எம் குடும்பத்தின் ஆணிவேராக
அழகுடன் மலர்ந்த எழிலுருவே எம் அம்மா!
உமைப் போலொரு சொந்தம்
இம் மாநிலத்தில் இனி வருமா?

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 24032) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னாரில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மேளதாளம், வாத்தியஇசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ய-213-56)



முல்லைத்தீவு - முள்ளியவளையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கல்யாண வேலவர் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ய-19)



வவுனியா கந்தசாமி ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ய-18)



திருமகள் சன சமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அமரர் நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் தொண்டைமானாறு கலையரசி அணி சம்பியனாகியது. (ய-27)



பேசாலை 1972ஆம் ஆண்டு மாணவர் அமைப்பால், மன்னார் பிரதேச சபைக்குச் சொந்தமான பேசாலை உள்நுழைவுப் பகுதியில் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம், மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது. (ம-14)



வி.பி.பவுண்டேசன் நிறுவனத்தின் ஸ்தாபகர் அ.இந்திரதாஸின் நிதியுதவியின் கீழ், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு நலன்சார் சேமிப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ய19)



மன்னார் விடத்தல்தீவு கால்பந்தாட்ட அக்கடமியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா, முகாமையாளர் ஜெயக்குமார் நதன்ராஜ் தலைமையில் விடத்தல் தீவு மீனவர் சங்க கட்டடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-60)

## பரிசில் வழங்கல்

கொடிகாமம் நவ. 1

சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்புமாத பரிசில் வழங்கும் நிகழ்வு வரணி பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைச்சபையின் ஒழுங்கமைப்பில் வரணி கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ய-159)



## கலாசாரத்தை பரப்புவதற்கு சிறப்புச் செயற்றிட்டங்கள்!

யாழ்ப்பாணம், நவ.1

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினரால் தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது என்று நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின் இணைத்தலைவர் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் கடந்த ஒரு வருடங்களாக பல பண்பாட்டு விழுமிய செயற்பாடுகளை செய்துகொண்டு வருகின்றது. அத்துடன் நூல்களை வெளியிட்டு கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

இப்பொழுது எங்களுடைய பண்பாட்டு விழுமிய செயற்பாடுகள் மெல்லமெல்ல எம்மிடமிருந்து அருகிச் செல்கின்ற நிலையிலேயே சமூகத்தில் ஓர் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

அந்த வகையில் தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நற்சிந்தனை, பண்ணிசை, கோலம்போடுதல், காவடியாட்டம் போன்ற எங்களுடைய பாரம்பரிய செயற்பாடுகளை நாம் இளைஞர்கள் மத்தியிலும் நாட்டமுள்ளவர்கள் மத்தியிலும் பரப்புவதற்காக இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளோம். இதில் பங்குபற்ற ஆர்வமுடையவர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டு நிகழ்வில் கலந்துகொள்ளலாம் - என்றார். (ய)

## ஆரோக்கிய உணவகம்: மாங்குளத்தில் ஆரம்பம்



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமுர்த்தி ஆரோக்கிய உணவகத் திட்டத்தின் கீழ், மாங்குளத்தில் அமைக்கப்பட்ட சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் ப.ஜெயராணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச்செயலர் க.விமலநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரோக்கிய உணவகத்தை திறந்து வைத்தார்.

நாடளாவிய ரீதியாக 21 சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 20ஆவது மையம் மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகள் உள்ளூர் மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு பாரம்பரியமான ஆரோக்கியமான உணவைத் தயாரித்து அவற்றை விற்பனை செய்து வருமானத்தை அடையும் வகையில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் 10க்கும் மேற்பட்டோர் நேரடியாகப் பயன்பெறுவர். சமுர்த்தி உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளும் தமது உற்பத்திகளின் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வர். இவர்களுக்கான துறைசார்ந்த பயிற்சிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. (ம-14-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைக்கு அரசு தயாராகவே இருக்கிறது

*பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு*



கொழும்பு, நவ.1

அடக்குமுறையை அடக்குமுறையால் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி கொழும்பு நகரை முற்றுகையிடுவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாராகி வருகின்றமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் எதிர்காலத்துக்காக நாட்டை ஒழுங்குபடுத்த வேண்டிய நேரமிது. மக்களைத் தாக்கி, கொலை செய்து, அரசாங்கத்தை கவிழ்க்க இடமளிக்க முடியாது.

அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு செவி கொடுக்க அரசாங்கம் எப்போதும் தயாராகவே உள்ளது. அதை விடுத்து கொலை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அரசாங்கம் என்ற வகையில் இரும்புக் கரம் கொண்டு செயற்பட வேண்டும். அடக்கவேண்டும் என்று கூறவில்லை. அடக்குமுறையில் ஈடுபட வந்தால், அதை அடக்குமுறையின் ஊடாகவே அடக்கவேண்டும்.

அவர்களின் தேவை நாட்டில் நிறைவேற்றப்படுமாயின் அது நாட்டுக்கு நல்லதாக இருக்காது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகவும் பலமான அரசியல் கட்சி. நாளை தேர்தலை நடத்தினாலும் கட்சி வலுவுடன் வெற்றி பெற முடியும் - என்றார். (எ-இ)

# கார்த்திகை மாத மரநடுகை தேசியத்தை குளிரச்செய்யும்

## மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஐங்கரநேசன் அறிக்கை



**யாழ்ப்பாணம், நவ.1**

**கார்த்திகை மாத மரநடுகை தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகை மாதத்தில் முன்னெடுக்கப்படும் மரநடுகை தேசத்தைக் குளிரச்செய்யும். தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் ஒரு தேசியச் செயற்பாடாகும் - இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டுமுதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

பூமி சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன. கடும் வறட்சி, காலம்தப்பிய பெருமழை, வேகமெடுக்கும் சூறாவளிகள், கடல்மட்ட உயர்வு, உயிரினங்களின் அழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால் வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப்பொருத்தமான மாதமாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பைக் கொண்டுள்ளது. இந்த மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவில் கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது தொல்வழிபாட்டு முறையாகக் கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்து, அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஓர் இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும். கார்த்திகை மாத மர நடுகை என்பது தமிழ்த்தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும். தமிழ் மக்கள் கார்த்திகை மர நடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன் கூடிய ஒரு தமிழ்த் தேசியச் செயற்பாடாகவும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ஏ)

# மட்டுவிலில் மணல் அகழ்வு உயிராபத்தில் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், நவ. 1

மட்டுவில் பகுதியில் அதிகாலை வேளையில் ஒரு பக்க முகப்பு விளக்குடன் டிப்பர்களில் சட்டவிரோதமாக மணல் கடத்தல் தொடர்கின்றது என்றும், இதனால் பொதுமக்கள் உயிராபத்தை எதிர்நோக்கும் அபாயமுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டுவில் பகுதியில் மணல் அகழ்வைத் தடுக்குமாறு எத்தனையோ தடவைகள் கோரிக்கை விடுத்தபோதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. மணல் அகழ்வால் ஒருபுறம், மணல் கடத்தலில் ஈடுபடும் டிப்பரால் மறுபுறம் என்று மக்கள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அதிகாலை வேளையில் ஒரு பக்க விளக்கை மாத்திரம் ஒளிரவிட்டபடி பயணிக்கும் டிப்பர்களால் போக்குவரத்தின்போது உயிராபத்தை எதிர்நோக்கும் நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ம-14,9)

# சுண்ணாம்புக்கல் அகழ்வு மூன்று பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், நவ. 1

கனரக வாகனத்தைப் பயன்படுத்தி சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சிறுப்பிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து மூன்று டிப்பர் வாகனம் மற்றும் பக்கோ இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-14,20,26,23)

# மருத்துவ உபகரணங்களுக்கும் நாட்டில் கடும் தட்டுப்பாடு!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, நவ.1

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக தற்போது சுகாதாரத் துறையில் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு மருந்துப் பொருள்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இயக்குநர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதுவரை காலமும் எமக்கு சிகிச்சைப் பிரிவுகளில் மருந்துத் தட்டுப்பாடுகள் மாத்திரமே காணப்பட்டன. ஆனால், தற்போது அதற்கு மேலதிகமாக மருத்துவ உபகரணங்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. வெளிநோயாளர் பிரிவுகளுக்குத் தேவையான அடிப்படை சிகிச்சைகளையேனும் மேற்கொள்ள முடியாமல் மருத்துவமனைகள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன.

முக்கியமான மருத்துவமனைகளில் அதுவும் கொழும்பை அண்மித்த மருத்துவமனைகளில் 'சேலைன்' பெறுவதற்கு கூட முடியாததொரு மோசமான நிலை காணப்படுகிறது. இரத்த மாதிரி பரிசோதனைகளுக்கு தேவையான சில உபகரணங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அநுராதபுரம் மருத்துவமனைகளில் 'எக்ஸ்ரே' பரிசோதனைகள் மேற்கொள்வதிலும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதனால் நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். ஈ.சி.ஜி பரிசோதனைகளை மேற்கொள்வதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ள[illegible] முன்னர் நாம் மருந்து[illegible]டுப்பாடு தொடர்பில் உ[illegible] யா[illegible]னோம். உண்மை[illegible] மருந்து தட்டுப்பாடு மே[illegible]கமாக தற்போது மருத்[illegible] உபகரணங்கள் மற்[illegible] அ[illegible]னுடன் தொடர்பு[illegible] ஏ[illegible]ய பொருள்களு[illegible] ம[illegible]துவமனைகளில் [illegible] பா[illegible] நிலவுகிறது - என்[illegible]

# சட்டவிரோத மணல் அகழ்வு இருவருக்கு விளக்கமறியல்!

கிளிநொச்சி, நவ. 1

சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இரு நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி சுண்டிகுளம் தேசியபூங்கா மற்றும் பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கோரமொட்டைப் பகுதியில் அனுமதியின்றி உள்நுழைந்த குற்றச்சாட்டு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தப்பட்டபோதே அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உழவியந்திரத்துக்கு மணல் ஏற்றுவதற்காகச் சென்ற அனைவரையும் விசாரணைக்குட்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-14,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக சுதந்திரக் கட்சி மீண்டும் உருவெடுக்கும்

## மைத்திரி சபதம்

கொழும்பு, நவ. 1
நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உருவெடுக்கும். மொட்டுக் கட்சி போல் எமது கட்சியும் துண்டுதுண்டாகச் சிதறுண்டு போகாது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு கட்சிகளுக்குள்ளும் எதிரிகளும், துரோகிகளும் இருப்பார்கள். அவர்களை அடையாளம் கண்டு களையெடுப்பது கட்சியின் தலைமையின் பொறுப்பு.

அந்தப் பணியை மொட்டுக் கட்சியின் தலைமை செய்யவில்லை. அதனால்தான் அந்தக் கட்சி இப்போது துண்டுதுண்டாகச் சிதறுண்டுபோயுள்ளது. அந்தக் கட்சியால் இனிமேல் மீண்டெழவே முடியாது.

மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவா? பஸில் ராஜபக்சவா? அல்லது ஜி.எல்.பீரிஸா என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.

மொட்டுக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் கூட்டணி அமைக்கத் தயாரில்லை. நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உருவெடுக்கும். மக்கள் நல்லாட்சியையே விரும்புகின்றார்கள் - என்றார். (ஒ-22)


வலி. கிழக்கு வடபகுதி
பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி
கிளை முகாமையாளர்
பயிற்சி அடிப்படையில் பயிற்சியாளர்களை
பயிற்றுவிப்பதற்கான
**விண்ணப்பம் கோரல்**

கிளை முகாமையாளர் பதவிக்கு பயிற்சி அடிப்படையில் பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிக் காலத்தின் போது பயிற்சிக் கால கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி நிறைவின் போது கிளை முகாமையாளர் பதவிக்கு உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவுத்திகதி (31.12.2022) விண்ணப்பங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**01.11.2022** **பொது முகாமையாளர்**
**T.P: 021 205 8112**


### எரிபொருள்...

காணப்படுகின்றது.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாம் திகதி எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைவாக எரிபொருள் விலையில் மாற்றம் கொண்டுவரப்படுகின்றது. இந்த நிலையில் இன்று நள்ளிரவு எரிபொருள் விலை குறைவடையும் என்ற எதிர்பார்ப்பில், எரிபொருளுக்கான முன்பதிவுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- எரிபொருள் கட்டணம் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டாலும் பயணிகளுக்கான பேருந்துக் கட்டணத்தில் எந்தவித மாற்றங்களையும் மேற்கொள்ளமுடியாது என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

'பேருந்துகளுக்கான உதிரிப் பாகங்களின் விலை மும்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாத நிலையில் உணவக உரிமையாளர்கள் தொழிலை முன்னெடுக்கின்றனர். இந்த நிலையில் பேருந்துக் கட்டணத்தைக் குறைத்தால், பேருந்தைநம்பி ஜீவனோபாயத்தைமுன்னெடுக்கும் தரப்பினர் எவ்வாறு உயிர்வாழ்வது?' என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-ஒ-இ)

### ரயில்...

காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன், கனகராயன்குளம் பகுதியில் ஒருவர் மோதுண்டுள்ளார். அவரது தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டு கனகராயன்குளம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ரயில் மோதியதில் உயிரிழந்தாரா? அல்லது அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்தாரா?, ஏற்கனவே உயிரிழந்த ஒருவரை ரயில் தண்டவாளத்தில் போட்டிருந்தார்களா? என்ற பல கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலம் சேட் இன்றி கறுப்பு காற்சட்டை அணிந்தவாறு காணப்படுகின்றது. (அ-ஒ-18)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
21 . 02 . 1993



இறைவன் அடியில்
30 . 10 . 2022

### பரமசிவம் சதன்

பூநகரியை பிறப்பிடமாகவும், கெருடாவில் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட பரமசிவம் சதன் கடந்த (30.10.2022) அன்று அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் பரமசிவம் நாகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், கணபதிப்பிள்ளை (அமரர்), சின்னம்மா (அமரர்), ஐயாத்துரை, பராசக்தி (அமரர்) ஆகியோரின் அன்புப் பேரனும், சஜீபா, சஜீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிசாந்தன் (புத்தூர்) அவர்களின் மைத்துனரும், கபிஸ்ரா, ஆரிஸ் ஆகியோரின் அன்பு மாமாவும், அருளானந்தம், நமசிவாயம் (ஜேர்மனி), சிவகுமார் (கனடா), கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (அமரர்), சீதாலட்சுமி, துஸ்யந்தினி, இந்திராணி, கனகேஸ்வரி, யோகாம்பிகை, வசந்தகுமாரி, றஞ்சினி, நிர்மலாதேவி ஆகியோரின் பெறா மகனும், சுபத்திரா (அமரர்), தியாகராசா, பற்பநாதன் (கொழும்பு), கோணேஸ்வரன் (செம்பன்குன்று), யோகநாதன், விஜயகுமார் (பிரான்ஸ்), உதயசூரியன் (அமரர்), வள்ளியம்மா, உதயமாலா, விஜயந்தினி, றஜிதா ஆகியோரின் அன்பு மருமகனும், சியாமளா (அமரர்), பகீரதி (அமரர்), பகீரதன் (அமரர்), உமாகாந்தன், கெங்காதரன், அனோசன், கௌசிகன், சிவராஜி, சிவராஜினி, பௌசிகா, அனோஜா, திவ்வியா, டனுசியா, சகானா, கீர்த்திக்கா, கிசானா, சதுஜன், வினோத், லோகிதன், அபிஷா, சுதேஷன், றஜிதரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், செந்தூரன், பகீரதி, சசிதரன், சசிகரன், மனோகரன், யசிந்தா, சுலோசன், நந்தகுமார், நிறோயன், அனுஷா, பிரஜீவா, சுறேகா, சிந்துஜா, சுகிதா, சுஜித், சேரன், டனுசா, நிலோஜன், திஸாளினி, அபினாஷ், அர்வின் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு : 077 8998 127 (அம்மா)**
**077 5492 396 (அருள்)**
**077 1551 272 (சாந்தன்)**
**077 1267 265 (ஈசன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் கேசவநாதன்

**(நாகபூசணி நகைத்தொழிலகம், கைதடி)**

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கு, பொற்தொழிலாளர் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் கேசவநாதன் அவர்கள் நேற்று (31.10.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் யசோதாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் யோகரட்ணம் (இராசாத்தி) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்பாத்துரை நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற ரகுணா, ஸ்ராலின் மற்றும் டென்மார்க் (துளபதி), மங்களா, இராகினி, இரத்தினசிங்கம், ஸ்ரீபதி (கெங்கம்மா) வரதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதாசிவம், கோபாலகிருஷ்ணன், பரமேஸ்வரன் (தயாளன்), சுகதாஸ் (வண்ணன்), மகிந்தன், அன்ரன், மூர்த்தி, சந்திரன் மற்றும் நாகேஸ்வரி, புஷ்பலதா, புஷ்பராணி, ஜெயதர்சினி, சிவதர்சினி, சாவித்திரி, ஈஸ்வரி, சாந்தினி, சுதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நடராசா உமையம்மா, திருநாவுக்கரசு அன்னபூரணம் ஆகியோரின் ஆசை மருமகனும், தங்கராசா, யோகராசா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன், ரோசாமலர், நாகபூசணி, சாந்தி, வசந்தி, அனுஜா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0779596729**

**தகவல்: மனைவி கேசவநாதன் யசோதா மற்றும் குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்ட காலத்தின் பின்னர்

# பணவீக்கம் சரிவு!

கொழும்பு, நவ. 1

நீண்ட இடைவெளியின் பிறகு, ஒக்ரோபர் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 3.8 சதவீதத்தால் குறைந்துள்ளதாக, சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, கடந்த செப்ரெம்பர் மாத பணவீக்கம் 69.8 சதவீதமாகப் பதிவாகியிருந்தது. ஆயினும் ஒக்ரோபர் மாதத்தில் அது 66 சதவீதமாகக் குறைந்துள்ளது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, உணவுப் பணவீக்கமும் செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒக்ரோபர் மாதத்தில் 9.3 வீதத்தால் குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பரில் 94.9 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம், ஒக்ரோபரில் 85.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

(அ-ஒ-இ)

# ஆலயத்தில் விழுந்தவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, நவ. 1

ஆலய வழிபாட்டுக்குச் சென்றவர், கால் கழுவும் தண்ணீர்க் குழாயின் அருகில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்று உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் கேசவநாதன் (வயது -52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தினமும் ஆலய வழிபாட்டுக்காகச் செல்லும் இவர், வழமைபோல கால் கழுவச் சென்றபோது சறுக்கி வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட வேளையில் அவர் உயிரிழந்துள்ளார்.

(அ-ஒ-9-131)

## யாழ். போதனாவுக்கு

# மருந்துகளுடன் வந்த வாகனம் விபத்து

யாழ்ப்பாணம், நவ. 1

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்களை ஏற்றி வந்த வாகனம் அநுராதபுரம் தல்கமுவலில் நேற்று மாலை பெண்ணொருவர் மீது மோதியது. இதில் காயமடைந்த பெண் தல்கமுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ஒ-27)

## வடக்கு...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று மாலை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

வடக்கு மாகாண பிரதம செயலர், யாழ். மாவட்டச் செயலர், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினர், சட்டமருத்துவ அதிகாரிகள், முப்படையினர், பொலிஸார் என உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டல் குழு தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது. உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரிகள், பாவனையாளர்கள் தொடர்பில் கிடைக்கும் இரகசியத் தகவல்களை அடிப்படையாக வைத்து கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் உயிர்கொல்லிப் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுகளைச் சரியான முறையில் இந்தக் குழு மேற்கொள்ளவுள்ளது.

கொழும்பு அரசின் முழுமையான ஒத்துழைப்பு இந்த விசேட குழுவுக்கு வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இதன்போது குறிப்பிட்டார்.

(அ-ஒ-5-125)

## பாணின்...

நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் நாளை முதல் குறைவடையலாம் என்று பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

'450 கிராம் நிறையுடைய (ஒரு இறாத்தல்) பாண் மற்றும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலை 10 ரூபாவால் இன்று (நேற்று) நள்ளிரவு குறைக்கப்படவுள்ளதாக' அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர், என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை - யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் கூட்டம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் குறைவடைய வாய்ப்புள்ளதாக பாஸ்கரன் குறிப்பிட்டார்.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் பாண் விலை 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டதாகவும், இப்போது அவர்கள் 10 ரூபாவையே குறைத்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் யாழ். மாவட்டத்தில் தற்போதும் 200 ரூபாவுக்கே பாண் விற்பனை செய்யப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-5)

## இரண்டே...

பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நீதி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவையை யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை முழுவதும் உயிர்கொல்லி போதைப்பொருள் மிகப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆனால், வடபகுதியில் அது மிகவும் அதிகளவில் காணப்படுகிறது. எதிர்கால சமூகத்தைப் பாதிக்கும் இந்த விடயம் தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை மிக அதிக அளவில் காணப்படுகின்றது. கடந்த ஒரு சில மாதங்களாக இது அதிகரித்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் உயிர்கொல்லி போதைப் பொருள்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஏனைய இடங்களோடு ஒப்பிடும்போது அதிகளவாகக் காணப்படுகின்றது. குறிப்பாக யாழ். மாவட்டம் மிகவும் ஒரு பாதிப்பான நிலையில் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தவேண்டும் - என்றார்.

அத்துடன் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், பொது மக்கள் சேவையைக் குழப்பும் வகையில் அரசியல்வாதிகள் மக்களைத் தூண்டிவிட்டுப் போராட்டம் செய்யும் நாகரிகமற்ற செயற்பாட்டைக் கைவிட வேண்டும் - என்று குறிப்பிட்டார். (ஒ-27)

**(தொடர்புடைய செய்திகள் உள்ளே)**

## அழகுக்கலை...

ஊடாகவே அவர்கள் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர் - இவ்வாறு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மேலதிக ஆலோசகர் லக்மீ நிலங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களிடம் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் குளியாபிட்டியவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர்;

அதிகளவான பெண்களிடம் தற்போது உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. குறிப்பாக குருநாகல் மாவட்டத்திலேயே இந்த நிலை பதிவாகியுள்ளது. ஆண்களை விடவும் பெண்களுக்கே பாதிப்பு அதிகமாகவுள்ளது. அழகுக் கலை நிலையங்களின் ஊடாக இந்தப் பழக்கத்துக்கு பெண்கள் அடிமையாகின்றனர். அடிக்கடி அழகுக் கலை நிலையங்களுக்குச் செல்லும் தங்களது பிள்ளைகள் குறித்து பெற்றோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## கொள்ளையனிடமிருந்து...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வழிப்பறிக்கொள்ளைக்கும்பல் ஒன்று வீதியில் செல்பவர்களைக் கத்தியைக்காட்டி மிரட்டி காப்பு, சங்கிலி உள்ளிட்ட 5 பவுண் நகைகளை கடந்த 18 ஆம் திகதி கொள்ளையிட்டது என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மானிப்பாயைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபரை உரும்பிராய் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர். இதேவேளை - பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபருக்கு எதிராக ஏற்கனவே 25 வழக்குகள் நீதிமன்றில் உள்ளன எனப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-26)

## கொட்டித் தீர்க்கும்...

வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் 30ஆம் திகதி முதல் கடும் மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில், வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே நேற்றுமுன்தினம் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த நிலையில் அந்த மாவட்டத்தில் சில இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளமையால் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், யாழ்ப்பாணத்தில் 37.2, திருநெல்வேலி 35.7, பண்ணையடி 27.6, கிளிநொச்சி 66.7, இரணைமடு 64.8, அம்பன் 53.3, அச்சுவேலி 56.7, பருத்தித்துறை 27, நெடுந்தீவு 38.6, சாவகச்சேரி 27, அக்கராயன்குளம் 21.3, நெல்லியடி 25.5, ஆனையிறவு 24.4, முல்லைத்தீவு 106.3 மில்லி மீற்றர் என மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் நேற்று மாலை வரையில் மழை காரணமாக இடப்பெயர்வுகள், பாதிப்புக்கள் எவையும் பெரியளவில் பதிவாகபோதும் மழை தொடர்ந்தும் நீடிக்குமாக இருந்தால் இன்று பெரும் பாதிப்புக்கள் ஏற்படக் கூடும் என்று மாவட்டச் செயலகங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-ஒ-5)

## வடக்கு - கிழக்குப் ...

கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் இராணுவத்தினர் வசமிருந்த 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணியை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் வர்த்தமானி 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவால் வெளியிடப்பட்டது. இதனை எதிர்த்து வழக்குத் தாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் போராட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் வலி.வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்த காணிகள் ஓரளவு விடுவிக்கப்பட்டன. இன்னமும் 3 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. இவ்வாறு உள்ள காணிகளில் ஆயிரத்து 600 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சால், வலி. வடக்கு பிரதேச செயலருக்கு செப்ரெம்பர் மாதம் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்துக்கு அமைவாக நடவடிக்கைகளை முன்னெடுக்க நில அளவைத் திணைக்களத்துக்கு பிரதேச செயலர் பாரப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வலி. வடக்கு காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. சிவில் அமைப்புக்களையும், அரசியல் கட்சிகளையும் பங்கெடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளவுள்ளனர். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




மறைந்த ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் 50ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் 50 மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடப்பட்டன. (ய-113)

# உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் அதிகரிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.1

உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களுக்கமைய உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது அரசாங்கம் எப்போதும் வர்த்தக சமூகத்தினருக்கு சக்தியை அளிக்கும் விதத்தில் செயற்படுவதற்கான தீர்மானங்களை எடுப்பதுடன், பொதுமக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் முதலாவது நிறுவனமாக, உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்படுகின்றன.ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நிதிப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தாலும், கொரோனாத் தொற்று உலகளாவிய ரீதியில் பரவியமையானது. இந்த நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்குக் காரணமாக அமைகின்றது.

அதனால் பொதுமக்களது சுகாதாரத்துக்காக அதிகளவான பணத்தை அரசாங்கம் செலவு செய்யவேண்டி ஏற்பட்டதுடன், தற்போது இருக்கும் நிலைமைகளை சமாளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. என்றார். (எ)

# மாணிக்கக்கல் அகழ்வு; மூன்று பேர் கைதாகினர்

கொழும்பு, நவ. 1

களனி கங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்கல , தொட்டுப்பல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-இ)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 1

ஹிக்கடுவ, திரானகம சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீதிமன்ற வழக்கு ஒன்றுக்காகச் சென்ற இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# இந்தியப் பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள்



புதுடில்லி, நவ. 1

பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் இந்தியாவுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் மீதான போரை ரஷ்யா தீவிரமாக முன்னெடுத்துக்கொண்டிருந்த நிலையிலும், ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்துள்ள நிலையில், பிரதமர் மோடி கடந்த மே மாதம் முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். ஜேர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளிலும் 65 மணி நேரங்களில் 25 நிகழ்வுகளில் பங்குபற்றினார். 8 உலகத் தலைவர்களைச் சந்தித்ததுடன் 50 சர்வதேச தொழிலதிபர்களுடனும் கலந்துரையாடியுள்ளார்.

புத்தரின் பிறந்த தினமான புத்த பூர்ணிமா தினத்தன்று நோபளத்துக்கு பயணம் செய்த பிரதமர் மோடி புத்தரின் பிறந்த இடமாகக் கருதப்படும் லும்பினியில் வழிபாடு நடத்தியதோடு, நோபாள பிரதமரையும் சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் பேச்சில் பங்கேற்றிருந்தார்.

மே மாதம் 24ஆம் திகதி ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டு, குவாட் உச்சிமாநாட்டில் பங்கேற்றிருந்தார். அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் கூட்டாக அமைந்துள்ள குவாட்டில் இந்தமுறை, இந்தியா இரண்டு வெற்றிகளையும் பெற்றிருந்தது.

இதனையடுத்து, அபுதாபி சென்ற பிர தமர் மோடி, ஐக்கிய அரபு எமிரேட்சின் மன்னரும், அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியுமான ஷேக் கலீஃபா பின் சையது அல் நஹ்யான் மறைவையொட்டி, தற்போதைய மன்னரும், அதிபருமான ஷேக் முகமது பின் சையது அல் நஹ்யானை சந்தித்து நேரில் இரங்கல் தெரிவித்தும் இருந்தார்.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் நடைபெற்ற 22ஆவது ஷங்காய் உச்சி மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி, ரஷ்ய ஜனாதிபதி புட்டின், சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சை நடத்தியிருந்தார்.

பிரதமர் மோடி, தனது முதலாவது பதவிக்காலத்துடன் ஒப்பிடுகையில் இரண்டாவது பயணக்காலத்தின் முதற்பாதியில் இதுவரையில் எழுபதுக்கு உட்பட்ட வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார். (ஒ-இ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்னும் ஆறு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மற்றும் நல்லூரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் (இருவர்) வசிப்பதற்கு உகந்த நல்ல சூழலையுடைய வீடு வாடகைக்கு தேவை.
(மாத வாடகை 15,000 இற்குள்)
077 378 4186, 077 844 8592

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் கோவில் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
மேலதிக விபரங்களுக்கு:
076 019 2485
(cr.38387) (2.6)

யாழ் நகரில் பணியாட்கள் தேவை
ரிக்கட் முகவர் அலுவலகம் ஒன்றிற்கு பெண்பணியாளர் தேவை. தகுதிகள் O/L அல்லது A/L படித்தவர்கள் மட்டும் யாழ் நகரில் இருந்து 5Km உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
முகவரி : வைத்தீஸ்வர சந்தி யாழ்ப்பாணம்
0771228841, 0758810010



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.